BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# தமிழ்ப் பழங்குடி சமூக வழக்காறும் மாலினோவ்ஸ்கி கோட்பாட்டுப் பார்வையும்

**ராஜேந்திரன் த**

முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த் துறை, கேரளப் பல்கலைக் கழகம், காரியவட்டம் வளாகம்,

திருவனந்தபுரம்- 695581, Mail id: rajapogar@gmail.com Mob: 6381905039

**ஆய்வுச் சுருக்கம்**

சமூகங்கள் தங்களின் அமைதியையும் சமூக ஒழுங்கையும் எவ்வாறு பேணுகின்றன என்ற வினா சமூக மானிடவியலின் முதன்மை வினாவாகும். ப்ரோனிஸ்லாவ் மாலினோவ்ஸ்கி (Bronisław Malinowski) தனது படைப்பான 1926-ஆம் ஆண்டு 'Crime and Custom in Savage Society' நூலில் முன்வைத்த சமூக அழுத்தக் கோட்பாடு, மேலைநாட்டு மானிடவியலாளர்கள் உருவாக்கிய "தானியங்கி கீழ்ப்படிதல்" எனும் பிழையான கருதுகோளை உடைத்தெறிந்தது. இக்கட்டுரை, மாலினோவ்ஸ்கியின் இக்கோட்பாட்டுப் புரட்சியைத் தமிழ் பண்பாட்டுத் தளத்திற்கு விரிவாகப் பொருத்தி ஆராய்கிறது. சங்க கால ஐந்திணை அமைப்பு முறையின் 'வளம்பகர்ந்து மாறல்' பண்டமாற்றுமுதல், தமிழகப் பழங்குடிகளான தோடர், கோத்தர், இருளர்களின் வழக்காற்றுச் சட்டங்கள் மற்றும் கிராமப்புற அமைப்புகள் வரை இக்கோட்பாட்டின் செயல்முறைத் தர்க்கத்தை இக்கட்டுரை ஆழமாக நிறுவுகிறது.

**குறிச் சொற்கள்:** சட்ட மானிடவியல், ப்ரோனிஸ்லாவ் மாலினோவ்ஸ்கி, சமூக அழுத்தம் (Reciprocity), ஐந்திணை அமைப்பு, வழக்காற்றுச் சட்டம், ஊர்க் கட்டுப்பாடு.

## முன்னுரை

மனித நாகரீகத்தின் ஆரம்ப காலகட்டங்களை ஆராயும் போது மனித சமூகங்கள் எவ்வாறு தங்களுக்குள் அமைதியையும், ஒழுங்கையும் பேணுகின்றன? என்ற கேள்வி எழுந்தது. நவீன சமூகம், அரசமைப்பு, நாடாளுமன்றம், காவல்துறை, நீதிமன்றம், மற்றும் சிறைச்சாலை போன்ற கட்டுப்பாட்டு அமைப்புகளோடு இயங்குகின்றன. ஆனால் எவ்வித அமைப்பும் இல்லாத சூழலில் பழங்குடி சமூகங்கள் எவ்வாறு தங்கள் இனக்குழுவிற்குள் பொருத்தமான ஒழுங்கையும் அறநெறியையும் காக்கின்றனர்? இக்கேள்வி சமூக மானிடவியல் மற்றும் சட்ட மானுடவியலாளர்களிடம் மையப் பொருளாக அமைந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மானிடவியல் துறை வளர்ச்சியடைந்த நிலையில், பழங்குடிச் சமூகங்களின் சமூகக் கட்டுப்பாடு மற்றும் சட்ட ஒழுங்கு குறித்த பல்வேறு கருத்தாக்கங்கள் முன்வைக்கப்பட்டன. அதற்கான பதிலைத் தேடத் தொடங்கினார்கள்.

தொடக்க கால மேலைநாட்டு மானிடவியலாளர்கள் ஐரோப்பிய மையவாத பார்வையுடன் பழங்குடி சமூகங்களை அணுகினார்கள். இப்பார்வையில் சட்டம் என்பது அரசு என்ற மத்திய அதிகாரம் மற்றும் நீதிமன்றங்களால் மட்டுமே உருவாக்கப்படக்கூடிய ஒன்று. நடைமுறைப்படுத்தப்படக்கூடிய ஒன்றாகக் கருதப்பட்டது. இதன் விளைவாக, முறையான அரசமைப்பும் நீதிமன்ற அமைப்பும் இல்லாத பழங்குடிச் சமூகங்களில் சட்டம் அல்லது சமூகக் கட்டுப்பாடு இல்லை என்ற தவறான புரிதல் உருவானது.

இதன் விளைவாக முறையான அரசு இல்லாத பழங்குடி சமூகங்களில் சட்டம் இல்லை என்றும், அங்குள்ள மனிதர்கள் பகுத்தறிவின்றி வெறும் பேய் பிசாசு மூடநம்பிக்கை பயத்தாலும், சடங்குகளாலும் "தானியங்கி கீழ்ப்படிதல்" என்ற மனநிலையில் மட்டுமே இனக் குழுவில் கட்டுப்படுகிறார்கள் என்று பிழையான

கருதுகோளை உருவாக்கினார். இந்த தவறான அணுகுமுறையினால் பழங்குடி சமூகங்களைப் பற்றிய புரிதல்கள் மற்ற ஆய்வாளர்களின் மனதிலும் இக்கருத்துகள் நிலவி வந்ததால் பழங்குடி மக்களின் எதார்த்தமான வாழ்க்கையை சமூகத்தில் பிரதிபலிக்க தவறின.

1926 ஆம் ஆண்டு மாலினோவ்ஸ்கி என்பவர் தனது படைப்பான Crime and custom in savage society என்ற ஆய்வு நூலில் ஆரம்பகால மானிடவியல் எழுத்துகளில், பழங்குடி சமூகங்கள் மேலைநாட்டு மானுடவியலாளர்களின் தவறான போக்கை கேள்விக்குட்படுத்தினார்.

பழங்குடிச் சமூகங்களில் சட்டமும், சமூகக் கட்டுப்பாடும் இல்லை என்ற முன்கருத்தை அவர் விமர்சன ரீதியாக மறுத்தார். சமூக உறுப்பினர்கள் விதிகளைப் பின்பற்றுவதற்குக் காரணம் வெறும் அச்சமோ சடங்கோ மட்டுமல்ல. சமூக உறவுகள், கடமைகள், பொருளாதாரத் தேவைகள், சமூக நலன் மற்றும் நடைமுறை வாழ்க்கைத் தேவைகள் ஆகியவையும் அவற்றின் அடிப்படையாக உள்ளன என்பதை மாலினோவ்ஸ்கி எடுத்துக்காட்டினார். இதன்மூலம், சட்டத்தை அரசு மற்றும் நீதிமன்றம் போன்ற முறையான நிறுவனங்களோடு மட்டுமே தொடர்புபடுத்திப் பார்க்கும் அணுகுமுறையிலிருந்து விலகி, சமூகத்தின் அன்றாட வாழ்வியல் நடைமுறைகளுக்குள் சட்டத்தையும் வழக்காற்றையும் புரிந்துகொள்ளும் புதிய பார்வை உருவானது.

இந்தக் கோட்பாட்டுப் பின்னணியில், மாலினோவ்ஸ்கியின் சட்ட மானிடவியல் பார்வையைத் தமிழ் பழங்குடிச் சமூகங்களின் வழக்காறுகள், சமூக நெறிமுறைகள் மற்றும் சடங்கு நடைமுறைகளுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. குறிப்பாக, தமிழ் பழங்குடிச் சமூகங்களில் நிலவும் வழக்காறுகள் எவ்வாறு சமூக ஒழுங்கை நிலைநிறுத்துகின்றன, தனிமனிதர்களுக்கிடையேயான பொறுப்புகள் மற்றும் கடமைகளை எவ்வாறு ஒழுங்குபடுத்துகின்றன, மேலும் சடங்குகள் மற்றும் சமூக நம்பிக்கைகள் எவ்வாறு சமூகக் கட்டுப்பாட்டின் கருவிகளாகச் செயல்படுகின்றன என்பதை மாலினோவ்ஸ்கியின் கோட்பாட்டுப் பார்வையின் அடிப்படையில் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

பழங்குடிச் சமூகங்களைப் பற்றிய தொடக்ககால மேற்கத்திய மானிடவியல் ஆய்வுகளில், அச்சமூகங்களின் எதார்த்தமான வாழ்வியலைப் பிரதிபலிக்காத இரு முரண்பட்ட கருத்தாக்கங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

- பழங்குடி மனிதன் எந்தவிதமான சமூக அழுத்தம் இல்லாமல் இயற்கையோடு இயைந்து வாழும் “சுதந்திரமான காட்டுமிராண்டி” என்ற பிம்பம் உருவாக்கப்பட்டது.
- பழங்குடிச் சமூகங்களில் எண்ணற்ற விதிமுறைகளும் தடைகளும் இருந்தபோதிலும், அவற்றை மக்கள் எந்தவிதமான சிந்தனையுமின்றி தானாகவே பின்பற்றுகின்றனர் என்ற கருத்தும் நிலவியது. இவ்விரு அணுகுமுறைகளும் பழங்குடிச் சமூகங்களின் நடைமுறை வாழ்வியல், சமூக உறவுகள் மற்றும் கடமைகளை முழுமையாகப் புரிந்துகொள்ளத் தவறின.

**சுதந்திரமான காட்டுமிராண்டி பிம்பம்**

பிரெஞ்சுச் சிந்தனையாளரான ஜான் ஜாக் ரூசோ முன்வைத்த “சுதந்திரமான காட்டுமிராண்டி” என்ற கருத்தாக்கம் தொடக்ககால மானிடவியல் சிந்தனையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. இக்கருத்தின்படி, பழங்குடி மனிதன் முறையான சமூகக் கட்டுப்பாடுகளோ, அரசுச் சட்டங்களோ இன்றி இயற்கையோடு இயைந்து, முழுமையான சுதந்திரத்துடன் வாழ்பவனாகக் கருதப்பட்டான்.

இத்தகைய பார்வை பழங்குடிச் சமூகங்களில் நிலவிய நெறிமுறைகள், வழக்காறுகள், சமூகப் பொறுப்புகள், உறவுமுறைகள் மற்றும் கடமைகள் போன்றவற்றின் முக்கியத்துவத்தைப் புறக்கணித்தது. இதனால், பழங்குடிச் சமூகங்கள் ஒழுங்கற்றதும் கட்டுப்பாடற்றதுமான சமூகங்களாகக் கற்பனை செய்யப்பட்டன.

**விதிகளின் பெருக்கமும் ‘தானியங்கிக் கீழ்ப்படிதல்’ கோட்பாடும்**

அதன் பின்னர் களஆய்வுகள் விரிவடைந்தபோது, பழங்குடி மனிதன் கட்டுப்பாடற்ற சுதந்திரவாதி அல்ல என்பது

தெளிவாகியது. அவர்களது அன்றாட வாழ்வில் உணவு, திருமணம், வேட்டை, கைவினைப் பொருட்கள் தயாரித்தல், பொருளாதாரப் பரிமாற்றம், மதச் சடங்குகள் போன்ற ஒவ்வொன்றிலும் பல்வேறு சமூக விதிமுறைகளும் தடைகளும் காணப்பட்டன. இத்தகைய விதிமுறைகளை சில மானிடவியலாளர்கள் ‘விதிகளின் பெருக்கம்’ எனக் குறிப்பிட்டனர்.

இதன் விளைவாக, பழங்குடி மனிதன் ஒரு முரண்பட்ட உருவமாகச் சித்தரிக்கப்பட்டான். ஒருபுறம் அவன் கட்டுப்பாடற்ற சுதந்திரமானவன் எனவும், மறுபுறம் தன்னைச் சுற்றியுள்ள மரபுகள் மற்றும் வழக்காறுகளின் கட்டுப்பாட்டிலிருந்து விலக முடியாதவன் எனவும் கருதப்பட்டான்.

இத்தகைய பின்னணியில், பழங்குடி மக்கள் தங்களுடைய சமூக மரபுகளையும் வழக்காறுகளையும் எவ்விதக் கேள்வியுமின்றி, சிந்தனையற்ற முறையில், தானாகவே பின்பற்றுகின்றனர் என்ற ‘தானியங்கிக் கீழ்ப்படிதல்’ என்ற கருத்து உருவானது. இதன்படி, சமூக உறுப்பினர்கள் தங்களுடைய மரபுகளின் காரணத்தையும் சமூகப் பயனையும் ஆராயாமல், தலைமுறைகளாகப் பின்பற்றப்பட்டு வரும் விதிகளுக்கு இயந்திரத்தன்மையுடன் கீழ்ப்படிகின்றனர் எனக் கருதப்பட்டது.

ஈ. சிட்னி ஹார்ட் லாண்ட், ரிவர்ஸ், ராபர்ட் லோவி போன்ற தொடக்ககால மானிடவியல் அறிஞர்களின் சில கருத்தாக்கங்கள் இத்தகைய பார்வையுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. பழங்குடி மனிதன் தனக்கு முன்னர் நிலவிய மரபுகளையும் பழக்கவழக்கங்களையும் ஆழமாக மதித்து, அவற்றின் கட்டளைகளுக்குத் தானாகவே கீழ்ப்படிகிறான் என்ற கருத்து இவ்வகையான அணுகுமுறையின் அடிப்படையாக அமைந்தது.

*“பழங்குடி மனிதன் தனக்கு முன்னுள்ள மரபுகளையும் பழக்கவழக்கங்களையும் ஆழமாக மதிக்கிறான். அவற்றின் கட்டளைகளுக்குத் தானியங்கியாகக் கீழ்ப்படிகிறான். அவன் அடிமைத்தனமாக, அறியாமையுடன், தன்னிச்சையாக அவற்றைப் பின்பற்றுகிறான்…”*(ஈ. சிட்னி ஹார்ட்லேண்ட், Primitive Law, பக்.138)

இதனால், பழங்குடிச் சமூகங்களில் அறநெறிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைக் கண்டறிவதற்குப் பதிலாக, அவை வெறுமனே அச்சம், மரபுப் பற்றுதல் அல்லது மனச்சோர்வு போன்ற உளவியல் காரணிகளால் பின்பற்றப்படுகின்றன என்ற எளிமைப்படுத்தப்பட்ட விளக்கம் முன்வைக்கப்பட்டது.

**மாலினோவ்ஸ்கியின் மறுப்பும் கண்டனமும்**

மேற்கண்ட கருத்தை மாலினோவ்ஸ்கி கடுமையாக விமர்சித்தார். இக்கருத்துகள் மனித இயல்புக்கு முற்றிலும் முரணானது. மனிதர்கள் தங்களுக்குச் இடையூறான அல்லது கடுமையான சமூகக் கட்டுப்பாடுகளை, எந்தவிதமான சுயநலம் இல்லாமலும், சமூகத் தேவையும், நடைமுறைப் பயனும் இல்லாமல் வெறுமனே தானாக ஏற்றுக்கொள்கின்றனர் என்ற கருத்து மனித இயல்பைப் பற்றிய தவறான புரிதலிலிருந்து உருவானது என அவர் சுட்டிக்காட்டினார்.

பழங்குடி மனிதனும் பிற மனிதர்களைப் போலவே தனது தேவைகள், விருப்பங்கள், நலன்கள் மற்றும் சமூக உறவுகளின் அடிப்படையில் செயல்படுபவனாவான். வாய்ப்பு கிடைக்கும் போது, குழுவின் ஒரு நெறியியைத் தவிர்க்கவும், நெறியின் வரம்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவும், தனக்கான நன்மையைப் பெறுவதற்காக சமூக நெறிகளைச் சாதகமாகப் பயன்படுத்தவும் அவன் முயற்சி செய்ய நேரிடும். எனவே, பழங்குடி மனிதனை ‘புனிதமான முன்மாதிரிக் குடிமகன்’ அல்லது மரபுகளுக்கு எவ்விதக் கேள்வியுமின்றி கீழ்ப்படிபவன் என்று சித்தரிப்பது எதார்த்தமானதல்ல.

மாலினோவ்ஸ்கி தனது ட்ரோபிரியாண்ட் தீவுகளின் களஆய்வுத் தரவுகளின் அடிப்படையில் இக்கருத்தை விளக்கினார். அங்கு சமூக விதிமுறைகள் வெறுமனே பயத்தின் காரணமாகப் பின்பற்றப்படவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார். மாறாக, சமூக உறுப்பினர்களுக்கிடையேயான கடமைகள், பொருளாதாரத் தேவைகள், சமூக எதிர்பார்ப்புகள், சமாதானம், நன்மை மற்றும் சமூக உறவுகளைப் பேண வேண்டிய அவசியம் ஆகியவை நெறிகளைப் பின்பற்றுவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.

இதன்மூலம், ‘சட்டம் என்பது எழுதப்பட்ட விதிமுறைகளின் தொகுப்பு’ என்ற குறுகிய மனப்பான்மை பார்வையைத் தாண்டி, சமூக வாழ்வின் நடைமுறைகளுக்குள் உள்ள சட்டத்தையும் வழக்காற்றையும் புரிந்துகொள்ளும் புதிய அணுகுமுறையை மாலினோவ்ஸ்கி உருவாக்கினார். அவரது பார்வையில், ஒரு விதி சமூகத்தில் செயல்படுவதற்குக் காரணம் அது மரபாக இருப்பது மட்டுமல்ல, அந்த விதி சமூக உறுப்பினர்களின் வாழ்க்கைத் தேவைகளுடனும் சமூக அழுத்த உறவுகளுடனும் தொடர்புடையதாக இருப்பதே அதன் செயல்பாட்டிற்கான முக்கிய அடிப்படையாகும். இதுவே சட்ட மானிடவியல் பார்வையின் அடிப்படை மாற்றமாகும்.

பழங்குடிச் சமூகங்களில் சட்டத்தைத் தேடும்போது நீதிமன்றம், காவல்துறை, சிறைச்சாலை போன்ற முறையான நிறுவனங்களை மட்டுமே தேடாமல், அன்றாட வாழ்வில் செயல்படும் கடமைகள், பொறுப்புகள், சமூக எதிர்பார்ப்புகள், வழக்காறுகள் மற்றும் சமூகத் தடைகள் ஆகியவற்றையும் சட்டத்தின் செயல்பாட்டு வடிவங்களாகக் கவனிக்க வேண்டும் என்பதே அவரது முக்கியமான கோட்பாட்டுப் பங்களிப்பாகும்.

**மாலினோவ்ஸ்கியின் புதிய செயல்முறைச் சட்ட வரையறை**

பழங்குடிச் சமூகங்களில் சட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்ற கேள்விக்கு மாலினோவ்ஸ்கி வழங்கிய விளக்கம் சட்ட மானிடவியலின் வளர்ச்சியில் முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது. தொடக்க கால மானிடவியல் ஆய்வுகளில் சட்டம் பெரும்பாலும் முறையான அரசியல் மற்றும் நீதித்துறை நிறுவனங்களுடன் தொடர்புபடுத்திப் புரிந்துகொள்ளப்பட்டது. நீதிமன்றம், காவல்துறை, எழுத்துப்பூர்வமான சட்டம், மத்திய அதிகாரம் போன்ற நிறுவனங்கள் இல்லாத சமூகங்களில் சட்டத்தின் இருப்பை அடையாளம் காண்பது சிக்கலானதாக இருந்தது. இதன் காரணமாக, பழங்குடிச் சமூகங்களின் சமூக ஒழுங்கு வெறும் மரபு, பழக்கம் அல்லது குழு உணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் இயங்குகிறது என்ற கருத்தும் உருவானது.

இந்த அணுகுமுறையை மாலினோவ்ஸ்கி கேள்விக்குட்படுத்தினார். குறிப்பாக, சமூகத்தில் சட்டம் எவ்வாறு நடைமுறையில் செயல்படுகிறது என்பதைக் கவனத்தில் கொள்ளாமல், அதன் வெளிப்புற நிறுவன வடிவங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு சட்டத்தை வரையறுப்பது பொருத்தமற்றது என அவர் சுட்டிக்காட்டினார். இதனால் சட்டத்தைப் புரிந்துகொள்வதற்கான கவனம் “சட்டத்தை யார் உருவாக்குகிறார்கள்?” என்ற நிறுவன மையக் கேள்வியிலிருந்து, “சமூகக் கடப்பாடுகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன?” என்ற செயல்முறை சார்ந்த கேள்விக்கு நகர்கிறது.

மாலினோவ்ஸ்கியின் பார்வையில், சமூகத்தில் தனிநபர்களுக்கிடையே உருவாகும் பரஸ்பரக் கடமைகள், அவற்றை நிறைவேற்ற வேண்டிய சமூக அழுத்தங்கள் மற்றும் அவற்றை மீறுவதால் ஏற்படும் விளைவுகள் ஆகியவை சட்டத்தின் செயல்பாட்டை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக பொருளாதாரப் பரிமாற்றம், உறவுமுறை, திருமணம், சமூகப் பொறுப்பு போன்ற தளங்களில் தனிநபர் ஒருவருக்கொருவர் கடமைகளைக் கொண்டிருக்கின்றனர். இக்கடமைகள் ஒருதலைப்பட்சமானவை அல்ல. அவை பரஸ்பர எதிர்பார்ப்புகள் மற்றும் சமூக உறவுகளால் நிலைநிறுத்தப்படுகின்றன.

மாலினோவ்ஸ்கியின் கருத்துப்படி, சட்டம் என்பது வெறுமனே அரசால் உருவாக்கப்பட்ட விதிகளின் தொகுப்பு அல்ல. மாறாக, சமூக உறவுகளில் தனிநபர்களையும் குழுக்களையும் கட்டுப்படுத்தும் கட்டாயமான சமூக அழுத்தங்களின் தொகுப்பாக புரிந்துகொள்ளப்படலாம். இக்கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தனிநபரின் தன்நலன், பொருளாதாரத் தேவை, சமூகப் புகழ், பிறரின் எதிர்பார்ப்பு மற்றும் சமூக அழுத்தம் ஆகியவை தூண்டுகோளாக செயல்படுகின்றன. அதேவேளை, கடமையை மீறுவது சமூக உறவுகளின் பாதிப்பு, நம்பிக்கை இழப்பு, எதிர்காலப் பரிமாற்றங்களிலிருந்து விலக்கப்படுதல் போன்ற விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். (மாலினோவ்ஸ்கி 1926:55-60.)

மேற்கூறியவற்றின் அடிப்படையில், மாலினோவ்ஸ்கியின் சட்டக் கருத்தின் மையத்தில் சமூக அழுத்தம், தன்நலன் மற்றும்

சமூக உறவுகளின் தொடர்ச்சி ஆகியவை அமைந்துள்ளன. இதன் மூலம் சட்டம் என்பது நீதிமன்றம் அல்லது காவல்துறை போன்ற முறையான நிறுவனங்களின் இருப்பதால் மட்டுமே அடையாளம் காணப்பட வேண்டிய ஒன்றல்ல. சமூக உறவுகளை ஒழுங்குபடுத்தும் நடைமுறைச் செயல்பாட்டின் அடிப்படையிலும் சட்டத்தன்மையை ஆராய முடியும் என்ற புதிய பார்வையை மாலினோவ்ஸ்கி முன்வைத்தார்.

இத்தகைய செயல்முறை அணுகுமுறை தமிழ் சமூகத்தின் வழக்காற்றுச் சட்டங்களை ஆய்வு செய்வதற்கும் பயனுள்ளதாக அமைகிறது. ஊர்ப்பொதுக் கடமைகள், உறவுமுறை சார்ந்த பொறுப்புகள், பரஸ்பர உதவி, பொருளாதாரப் பரிமாற்றம், சமூக மரியாதை மற்றும் சமூகக் கட்டுப்பாடு போன்ற நடைமுறைகளை அவற்றின் சமூகச் செயல்பாட்டின் அடிப்படையில் ஆராய்வதற்கான கோட்பாட்டுத் தளத்தை இது வழங்குகிறது.

**தமிழ்ச் சமூக அமைப்பில் கோட்பாட்டின் பொருத்தப்பாடு**

மாலினோவ்ஸ்கியின் செயல்முறைச் சட்டக் கோட்பாட்டைத் தமிழ் வரலாற்று, சமூகவியல் மற்றும் வழக்காற்றியல் சூழலோடு தமிழ்ச் சமூகத்தின் மீது நேரடியாகப் பொருத்தி இவை அனைத்தும் சட்டமே என்று முடிவுசெய்வதைவிட, தமிழ் சமூகத் தரவுகளில் காணப்படும் பரஸ்பரப் பொறுப்பு, கடமை, பரிமாற்றம், சமூக அழுத்தம் மற்றும் வழக்காற்று நெறிகள் ஆகியவற்றை மாலினோவ்ஸ்கியின் கருத்தியல் சட்டகத்தின் வழியாக மறுவாசிப்பு செய்வதே பொருத்தமானதாகும்.

தமிழ்ச் சமூக அமைப்பைப் புரிந்துகொள்ள இக்கோட்பாட்டை மூன்று பிரிவுகளில் பிரிக்கலாம்

- சங்ககாலத் திணை சார்ந்த பொருளாதாரப் பரிமாற்றங்கள்,
- பழங்குடிச் சமூகங்களின் வழக்காற்று நெறிகள்,
- கிராமப்புற ஊர்க் கட்டுப்பாடு மற்றும் மரபுவழித் தீர்வு முறைகள்.

**சங்ககால ஐந்திணை சார்ந்திருப்பு**

சங்க இலக்கியங்களில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பகுக்கப்படும் ஐந்திணையும் இயற்கைச் சூழல், வாழ்வியல், தொழில் மற்றும் பொருளாதாரச் செயல்பாடுகளோடு நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்படுகிறது. இத்திணைகளை முற்றிலும் தனித்தனி பொருளாதார அலகுகளாகக் கருதுவது பொருத்தமற்றதாயினும், வெவ்வேறு நிலப்பரப்புகளில் கிடைத்த வளங்களுக்கிடையே பரிமாற்றம் நிகழ்ந்ததற்கான இலக்கியச் சான்றுகள் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன.

கடல் சார்ந்த நெய்தல் நிலத்தில் கிடைத்த மீன் போன்ற வளங்களும், மருத நிலத்தில் விளைந்த நெல் போன்ற வேளாண் வளங்களும் பரிமாற்றத்திற்கு உட்பட்டன. புறநானூறு 343-ஆம் பாடலில் **“மீன் நொடுத்து நெல் குவைஇ”** என்ற பாடல், மீனை வழங்கி நெல்லைப் பெறும் பொருளாதாரப் பரிமாற்றத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. இதேபோன்று சங்க இலக்கியங்களில் உப்பு, மீன், நெல் போன்ற பொருட்கள் பரிமாற்றம் செய்த தகவல்கள் கிடைக்கின்றன.



**பனியர்**

இத்தகைய பரிமாற்றங்களை மாலினோவ்ஸ்கியின் பரஸ்பரக் கடப்பாடு என்ற கருத்தின் வழியாகப் புரிந்துகொள்ள முடியும். ஒருவர் வழங்கும் பொருளுக்கு எதிராக மற்றொருவரிடமிருந்து பொருள் அல்லது பயன் கிடைப்பது, தனிநபர் தேவையை நிறைவேற்றுவதோடு மட்டுமல்லாமல், தொடர்ச்சியான சமூக மற்றும் பொருளாதார உறவுகளையும் உருவாக்கக்கூடும். இதனால் பரிமாற்றம் என்பது வெறும் பொருளாதாரச் செயல் மட்டுமல்லாமல், பரஸ்பரச் சார்பை உருவாக்கும் சமூக உறவாகவும் அமைகிறது.

இதன் அடிப்படையில், நெய்தல் நிலத்தைச் சேர்ந்தவர் மீனை வழங்குவதும், மருத நிலத்தைச் சேர்ந்தவர் நெல்லை வழங்குவதும்

தொடர்ச்சியான பரஸ்பரப் பரிமாற்ற உறவின் பகுதியாகப் பார்க்கப்படலாம். இந்த உறவு முற்றிலும் தனிநபர் சுதந்திரமான விருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே இயங்கியதாகவும் கூறவிட முடியாது. அதேவேளை இதனை கட்டாயப்படுத்திய ஒரு மையப்படுத்தப்பட்ட சட்ட அதிகாரம் இருந்தது என்றும் சங்கச் சான்றுகளின் அடிப்படையில் கூற முடியாது. இங்கு தேவையானது பரஸ்பரப் பயன், பொருளாதாரச் சார்பு மற்றும் தொடர்ச்சியான உறவு ஆகியவை பரிமாற்றத்தை நிலைநிறுத்தியதாக மட்டுமே கருத முடியும்.

ஒருவரிடமிருந்து பெறுவது, எதிர்காலத்தில் திருப்பிக் கொடுக்கும் எதிர்பார்ப்பையும் உறவின் தொடர்ச்சியையும் உருவாக்குகிறது. இந்தக் கோணத்தில் பார்க்கும்போது, சங்ககாலப் பொருளாதாரப் பரிமாற்றங்களையும் பரஸ்பரச் சார்பின் அடிப்படையில் உருவான சமூக உறவுகளாகவே நாம் ஆய்வு செய்ய முடியும்.

**தமிழ்ப் பழங்குடியினரின் வழக்காற்று நெறிகளும் சமூகக் கடப்பாடுகளும்**

தமிழகத்திலும் தென்னிந்தியாவின் மலைப்பகுதிகளிலும் வாழும் தோடர், கோத்தர், இருளர், காடர், மலைப்புலயர் போன்ற பழங்குடிச் சமூகங்களின், வழக்காறு, உறவுமுறை, பொருளாதார வாழ்வு, சடங்கு மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றின் பரஸ்பரத் தொடர்பை மாலினோவ்ஸ்கியின் கோட்பாட்டோடு ஒப்பிடும்போது, அவற்றை வெறும் பழக்கவழக்கங்கள் அல்லது மூடநம்பிக்கைகள் என்று ஒரு வரியில் சொல்லிவிட முடியாது, அவை சமூக வாழ்வில் வெளிப்படுத்தும் ஆற்றல் செயல்பாட்டை ஆராய்வது அவசியம்.



இருளர்

மாலினோவ்ஸ்கியின் பார்வையில், ஒரு சமூக விதியின் முக்கியத்துவத்தை அதன் இருப்பில் மட்டுமல்லாமல், அது சமூக உறவுகளை எவ்வாறு ஒழுங்குபடுத்துகிறது என்பதிலும் காண வேண்டும். தனிநபர்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் கடமைகள், எதிர்பார்ப்புகள், பரஸ்பர உதவிகள் மற்றும் சமூகப் பொறுப்புகள் ஆகியவை தொடர்ந்து செயல்படும்போது சமூக ஒழுங்கு உருவாகிறது. இந்த அடிப்படையில், பழங்குடிச் சமூகங்களின் வழக்காற்று நெறிகளைப் புரிந்துகொள்ளும்போது, அவற்றின் பின்னணியில் உள்ள சமூக மற்றும் பொருளாதார உறவுகளைப் புரிந்துகொள்ள வழிவகுக்கும்.

**தோடர் சமூகத்தின் எருமை-பால் பண்பாடு**

நீலகிரி மலையில் வாழும் தோடர் பழங்குடி மக்களின் வாழ்வியல், எருமை மாடுகளோடும் அவற்றின் பாலோடும் பிரிக்க முடியாதபடி பிணைந்துள்ளது. எருமை மாடுகள் அவர்களுக்கு வெறும் பொருளாதார ஆதாரம் மட்டுமல்ல, அவர்களின் சமயம், பண்பாடு மற்றும் அன்றாட வாழ்க்கையின் மையப்புள்ளியாகவும் விளங்குகின்றன.பழங்கால இனவரைவியல் பதிவுகளின்படி, தோடர்களின் பால் நிலையங்களில் புனிதத் தன்மைகளும், அதற்கேற்ற தனித்துவமான விதிகளும் பின்பற்றப்படுகின்றன.

பால் சடங்குகளை அதிகாரமுடைய குறிப்பிட்ட நபர்கள் மட்டுமே கையாள அல்லது பயன்படுத்த முடியும்.

பால் கறப்பது, பாலைப் பதப்படுத்துவது மற்றும் அதனைப் பயன்படுத்துவது என அனைத்திற்குமே இறுக்கமான கட்டுப்பாடுகள் உண்டு.

இத்தகைய விதிகளை வெறும் மூடநம்பிக்கை என்று மட்டும் கடந்து போய்விட முடியாது. உண்மையில், தோடர் சமூகத்தின் சமூகப் பொறுப்பையும், பண்பாட்டு ஒழுங்கையும் நிலைநிறுத்தும் நடைமுறைகளாகச் செயல்படுகின்றன.

பால், எருமை, பால் நிலையங்கள், சடங்கு அதிகாரங்கள் மற்றும் சமூகப் பொறுப்புகள் ஆகியவை ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுள்ளன. இதனால், ஒரு தனிநபர் செய்யும் சிறு தவறு அல்லது விதிமீறல், அவரது தனிப்பட்ட செயலாக மட்டும் எஞ்சாமல், ஒட்டுமொத்த சமூக உறவுகளையும் முறிக்கிறது.

மாலினோவ்ஸ்கியின் கூற்றுப்படி ஒரு பழங்குடி மனிதனின் நடத்தையை மூன்று கரணங்கள் தீர்மானிக்கின்றன. அவை

- பொருளாதாரத் தேவைகள் மற்றும் பரஸ்பர உதவி உறவுமுறை மற்றும் சமூக எதிர்பார்ப்புகள்
- சமூகப் புகழ் மற்றும் மதிப்பைப் பெறுதல்
- சமூகத் தடைகள் பற்றிய பயம்

சுருக்கமாகச் சொன்னால், தோடர் சமூகத்தில் பால் நிலையங்களைச் சுற்றி அமைந்துள்ள கட்டுப்பாடுகள் என்பது, அச்சத்தால் உருவானது அல்ல. மாறாக, பரஸ்பரக் கடமைகளாலும் சமூகப் பொறுப்புகளாலும் கட்டமைக்கப்பட்ட ஒரு நேர்த்தியான சமூகக் கட்டுப்பாட்டு அமைப்பாகும்

பழங்குடி மனிதன் அமானுஷ்யப் பயத்தினால் மட்டுமே விதிகளைக் கடைப்பிடிக்கிறான் என்ற பழைய பொதுமைப்படுத்தலையும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதேபோல், தன்நலன் அவனை விதிகளைக் கடைப்பிடிக்கச் செய்கிறது என்றும் நாம் மறுக்க இயலாது.

**கோட்பாட்டிலிருந்து தமிழ் சமூக எதார்த்தத்திற்கு**

இதனால் மாலினோவ்ஸ்கியின் பங்களிப்பு இரண்டு நிலைகளில் புரிந்துகொள்ளப்பட வேண்டும். முதலாவது, பழங்குடிச் சமூகங்களை சட்டமற்ற சமூகங்களாகக் கருதிய பார்வையை அவர் சவாலுக்கு உட்படுத்தினார். இரண்டாவது, சமூக விதிகள் எவ்வாறு நடைமுறையில் செயல்படுகின்றன என்பதைக் கவனத்தில் கொள்ளும் செயல்முறைப் பார்வையை உருவாக்கினார்.



**கோத்தர்**

தமிழ்ச் சமூகத்தின் சூழலில் இப்பார்வை வழக்காறு, பொருளாதாரப் பரிமாற்றம், உறவுமுறை, சமூகக் கடமை, ஊர்க் கட்டுப்பாடு மற்றும் பழங்குடியினரின் பண்பாட்டு நெறிகள் ஆகியவற்றை புதிய கோணத்தில் ஆராய உதவுகிறது. அதேவேளை, தமிழ் சமூகத்தின் தனித்துவமான அதிகார உறவுகள், சமூக வேறுபாடுகள் மற்றும் வரலாற்றுச் சூழல்களையும் இணைத்துப் பார்ப்பதன் மூலம் மாலினோவ்ஸ்கியின் கோட்பாட்டை விமர்சன ரீதியாக விரிவுபடுத்த முடியும்.

இதனால், வழக்காற்றுச் சட்டம் என்பது வெறும் “எழுதப்படாத சட்டம்” என்ற குறுகிய பொருளில் மட்டுமல்லாமல், சமூக உறவுகளை ஒழுங்குபடுத்தும் கட்டுப்பாடுகள், எதிர்பார்ப்புகள், மற்றும் அதிகார உறவுகளின் இயக்க அமைப்பு என்ற விரிவான பொருளில் அணுகப்பட வேண்டியுள்ளது.

**முடிவுரை**

சமூக ஒழுங்கு என்பது அரசின் முறையான சட்ட நிறுவனங்கள், நீதிமன்றங்கள் மற்றும் தண்டனை அமைப்புகள் ஆகியவற்றின் வழியாக மட்டுமே உருவாக்கப்படுவதில்லை என்பதை மாலினோவ்ஸ்கியின் சட்ட மானிடவியல் அணுகுமுறை தெளிவுபடுத்துகிறது. Crime and Custom in Savage Society -1926 நூலின் வழியாக, பழங்குடிச் சமூகங்கள் சட்டமற்றவை என்ற பார்வையையும், சமூக விதிகளுக்கு மனிதர்கள் சிந்தனையின்றித் தானாகவே கீழ்ப்படிகின்றனர் என்ற கருத்தையும் அவர் மறுத்தார். தனிநபர்களுக்கிடையேயான பரஸ்பரக் கடப்பாடுகள், பொருளாதாரச் சார்பு, சமூக எதிர்பார்ப்புகள், தன்நலன் மற்றும் சமூக அழுத்தங்கள் ஆகியவை இணைந்து சமூக ஒழுங்கை உருவாக்குகின்றன என்பதே அவரது அணுகுமுறையின் முக்கியத்துவமாகும்.

இக்கருத்தைத் தமிழ்ச் சமூகத்தின் வரலாற்று மற்றும் பண்பாட்டு எதார்த்தங்களோடு தொடர்புபடுத்திப் பார்க்கும்போது, சட்டம், வழக்காறு, சமூகக் கடமை மற்றும் பொருளாதாரப் பரிமாற்றம் ஆகியவற்றின் நெருங்கிய தொடர்பை அறிய முடிகிறது. சங்க இலக்கியங்களில் காணப்படும் மீன், நெல் போன்ற பண்டமாற்றுச் செய்திகள், வெவ்வேறு வாழ்வியல் சூழல்களுக்கிடையேயான பொருளாதாரப் பரிமாற்றத்தையும் பரஸ்பரச் சார்பையும் வெளிப்படுத்துகின்றன. இதனை நேரடியாக சட்டம் என வகைப்படுத்தாமல், மாலினோவ்ஸ்கியின் பரஸ்பர தன்மை என்ற கருத்தின் வழியாக சமூக பொருளாதார

உறவாகப் புரிந்துகொள்வது பொருத்தமானதாகும்.

அதேபோன்று, தோடர் உள்ளிட்ட பழங்குடிச் சமூகங்களின் வழக்காற்று நெறிகளில் பொருளாதார வாழ்க்கை, சடங்கு, சமூகப் பொறுப்பு மற்றும் பண்பாட்டு ஒழுங்கு ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. இந்நெறிகளை வெறும் நம்பிக்கை அல்லது சடங்கு எனக் குறைத்து மதிப்பிடாமல், அவை சமூக உறவுகளையும் கடமைகளையும் எவ்வாறு ஒழுங்குபடுத்துகின்றன என்பதை ஆராய்வது மாலினோவ்ஸ்கியின் செயல்முறைப் பார்வைக்கு வலுசேர்க்கிறது.

தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் காணப்படும் மரபுவழித் தீர்வு முறைகள் மற்றும் ஊர்க் கட்டுப்பாடுகளிலும் சமூக எதிர்பார்ப்பு, உதவி, உறவுமுறை, சமூக அங்கீகாரம் மற்றும் விதிமீறலுக்கான சமூகப் பதில் ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன. எனினும், இத்தகைய நடைமுறைகள் அனைத்தையும் சட்டம் என நேரடியாக வகைப்படுத்த முடியாது. அவற்றின் செயல்பாடு, சமூகச் சூழல் மற்றும் அதிகார உறவுகளைத் தனித்தனியாக ஆராய்வதே ஆய்வியல் ரீதியாகப் பொருத்தமானது.

இவ்வாய்வின் முக்கியமான கருத்தாக "சமூக அழுத்தத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக ஒழுங்கு" என்பதை முன்வைக்கலாம்.

சமூகச் சார்பு, சமூகக் கட்டுப்பாடு மற்றும் அதிகார உறவுகள் ஆகியவை ஒன்றிணைந்து வழக்காற்று சமூக ஒழுங்கை உருவாக்குகின்றன. எனவே, வழக்காறு என்பது வெறும் பழமையான மரபு அல்ல, குறிப்பிட்ட சமூகச் சூழலில் உரிமை, கடமை, பொறுப்பு, எதிர்பார்ப்பு மற்றும் சமூக உறவுகளை ஒழுங்குபடுத்தும் ஆற்றலாக அமைகிறது.

மேற்கூறியவாறு மாலினோவ்ஸ்கியின் கோட்பாட்டைத் தமிழ்ச் சமூகத்தின் மீது இயந்திரத்தனமாகப் பொருத்துவதற்குப் பதிலாக, அவரது சமூக அழுத்தம், சமூகச் சார்பு மற்றும் செயல்முறை ஆகிய கருத்துகளைத் தமிழ் சமூகத்தின் வரலாற்று, பழங்குடியியல் மற்றும் நாட்டுப்புறத் தரவுகளோடு இணைத்து மறுவாசிப்பு செய்வதே இவ்வாய்வின் முக்கியப் பங்களிப்பாகும். இதன் மூலம் சட்டம் என்பது நீதிமன்றம் அல்லது அரசின் அதிகாரத்தால் மட்டுமே உருவாகும் ஒன்று அல்ல, சமூக உறவுகளின் அன்றாடச் செயல்பாட்டிலும் கடப்பாடுகளிலும் உருவாகி நிலைபெறும் ஒரு சமூக நிகழ்வாகவும் புரிந்துகொள்ள முடிகிறது.

**துணை நூற்பட்டியல்**


1. பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2018.
2. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல், அடையாளம் பதிப்பகம், திருச்சி, 2011
3. ராமச்சந்திர குகா. (மொ) வேலு ராஜகோபால், வெர்ரியர் எல்வினும் அவரது பழங்குடிகளும், காலச்சுவடு பதிப்பகம். திருநெல்வேலி, 2016
4. ஜஸ்ட், பீட்டர்., & மோன்கன், ஜான்., சமூக - பண்பாட்டு மானுடவியல் மிகச் சுருக்கமான அறிமுகம், அடையாளம் பதிப்பகம். திருச்சி, 2005
5. ஜெயதேவ், சி. ஜே., & இரகுபதி, மு., பழங்கால பண்பாடும் பழங்குடிகள் பண்பாடும், தமிழ்நாடு அரசு அரசாங்கப் பொருட்காட்சி சாலை. சென்னை, 1962.
6. Malinowski, Bronislaw , Crime and Custom in Savage Society, 1926


*****